21

21

வெளியீடு நெ. 2 உ

அருட்பெருஞ்ஜோதி ! தனிப்பெருங்கருணை !!

அன்பே கடவுள்.

சற்குரு

திரு அருட்பிரகாச வள்ளலார்

தோத்திரம்



OFFICE OF THE REGISTRAR
2 - JAN 1942
MADRAS

முதல் பதிப்பு.

894.81

ஸ்ரீ ஷண்முகானந்த ஆச்ரம,

சமரச சுத்த சன்மார்க்க சங்கம்.

சக்கரப்படித்துறை, கும்பகோணம்.

அருட்பெருஞ்ஜோதி.

குறள் வெண்பா.

எல்லாஞ் செயல்கூடும் என்னுணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் றனையே ஏத்து.

பரசிவ வணக்கம்.

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவா நுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே!
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியதுவிளங்க-உலக
மெலாம் விளங்க அருள் உதவுபெருந் தாயாம் மரு
விளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால்விளங்க-வயங்கு
மணிப் பொதுவிளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே.

சற்குரு தோத்திரம்.

சற்குருநாதா சற்குருநாதா
சன்மார்க்கசங்கம் தழைக்க அருள் தாதா.

வருகைப் பதிகம்.

உலகந் தழைக்க வந்துதித்த வுருவே வருக வோதாதே
உற்ற கலைக ளனைத்தினையு முணர்ந்தோய் வருகவொன்றிரண்டற்
றிலகும் பரமா னந்தசுக இயல்பே வருக யிம்பர்தமை
இறவாக் கதியி லேற்றுகின்ற யிறையே வருக யென்போல்வார்
கலகந் தவிர்த்துக் கதியளிக்குங் கண்ணே வருக கண்ணிறைந்த
களிப்பே களிப்பி லூறுகின்ற கனிவே வருக கலைமதிதோய்
வலகஞ் செறிந்த வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (1)

வெளியிற் சிறந்த சுத்தபர வெளியே வருக வெம்மலமாம்
வெய்ய திமிர மொழிக்கவரு விளக்கே வருக வேதாந்தத்
தளியிற் சிறந்த மௌனநறுந் தருவே வருக சன்மார்க்கந்
தழைக்க வுலகி லவதரித்த தலைவா வருக சமரசமாம்
அளியிற் சிறந்த பெருங்கருணை பப்பா வருக வாப்த ரெலாம்
அண்ணிப் பரவும் புண்ணியமெய் யருளே வருகவதிநலஞ்சேர்
வளியிற் சிறந்த வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (2)

கருணை நிறைந்து வழியுமருட் கடலே வருக கற்பகத்நிற்
காய்த்து முதிர்ந்து பழுத்தநறுங் கனியே வருக கருதுகிற்போர்
இருணை யுறவே யெரிவிளக்கா மிறையே வருக யெழுமையினும்
இம்மை யம்மைப் பயனளிக்கும் எந்தாய் வருக யிடர்செயுமோர்
மரணந் தவிர்த்து வாழ்வளிக்கு மருந்தே வருக வென்னிதய
மலரை மலர்த்தும் வான்சுடரேசெம் மணியே வருக வழுத்தரிதாம்
வருண நிறைந்த வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (3)

வேத முடிவில் விளங்குமருள் விளக்கே வருக மெய்ஞ்ஞான
வீட்டின் பயனு யோங்குகின்ற விருந்தே வருக விளங்குபர
போத மயமா யோங்குமுயர் பொருப்பே வருக வானந்தம்
பொங்கித் ததும்பி வழியுமருட் புனலே வருக பூரணமாய்
ஏத மகன்ரு ருள்ளகத்தில் இருப்போய் வருக யிதமகிதம்
இரண்டுங் கடந்த யிறுதிசுகம் ஈவோய் வருக யெஞ்ஞான்றும்
வாத மகன்ற வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (4)

செப்பும் ஷடாந்த நிலைமுழுதுந் தெரிந்தோய் வருக திரிவிதமாந்
தீக்கை யுடையோர் பரவு மருட் செல்வா வருக செகதலத்தில்
ஒப்பு முயர்வு நீத்தபர வுருவே வருக வொற்றியிலே
வுவட்டா வமுத முண்டவக்கு முணர்வே வருக வுறுபசியாம்
வெப்பு தவிர்த்து சுகமளிக்கும் விபுவே வருக விண்ணோரும்
வேண்டிப் பரவு மொருதெய்வ வொளியே வருக விழுமியர்தம்
வைப்பென் றிலகும் வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (5)

பத்தி சுவைக்கு முயர்ஞானப் பழமே வருக பரவுகிற்போர்
பந்தந் தொலைக்க வந்தகுரு பானே வருக பழிச் சரிதாம்
சித்தி நிலைகள் பலபுரிந்த சிவமே வருக முத்தேகத்
திறம்பெற் றழியா தோங்குமருட் செல்வா வருக சிவயோக
முத்தி நிலையாஞ் சோபான மொழிவோய் வருக முழுதுணர்ந்த
முனிவ ரகத்தும் புறத்துமொளிர் முத்தே வருக மூவாசை
மத்த ரளியா வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (6)

ஓடும் பொருளு மொன்றுய்க்கண் டுவட்போய் வருக வோங்காரத்
துண்மை யறிந்த யோகியர்தம் உளவே வருக உவப்புடனே
பாடுந் தொழிலே மேற்கொண்ட பதியே வருக பதிநிலையிப்
பாரி லுரைக்க வவதரித்த பண்பே வருக பரிவுடனே
கூடு மடியார் குழுவமர்ந்த குருவே வருக ருணமெனுமோர்
குன்றில் விளங்கு மெமதுகுலக் கொழுந்தே வருக குவலயத்தில்
வாடுந் தகவில் வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (7)

பாசக் கிழங்கைப் பறித்தெடுக்கும் பரசே வருக பழவடியார்
பகரும் வேத ராசியமாம் பண்ணே வருக பவப்பிணியை
நாசம் புரிந்து நலமளிக்கும் நட்பே வருக நாதாந்த
நடனங் காணுந் திறலளித்த நாதா வருக நதிமதியம்
வீசும் சடையோ னருள்வடிவாம் வித்தே வருக வியனிலத்தில்
விருப்பும் வெறுப்பு மற்றசுக விழைவே வருக விளம்புபல
வாச நிறைந்த வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (8)

கண்டா லினிக்கு மதிமதுரக் கரும்பே வருக காதலித்தோர்
கன்றங் கழியக் கண்கணிக்குங் களிப்பே வருக கடவுளர்தந்
தொண்டால் யாவும் வருமென்றே சொல்வோய் வருக துரியபரஞ்
சோதி நிலையைக்காட்டவந்த துரையே வருக சூக்குமத்தை
விண்டா லனைத்தும் விளங்குமென விரிப்போய் வருக விண்ணோரும்
வேண்டும் பரமா னந்தசுக விளைவே வருக வியன்பொழிலில்
வண்டார் வலஞ்சூழ் வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (9)

சாகாக் கல்வி கரைகண்ட சதுரா வருக சாந்தமெனுந்
தவளக் கலையை யுடுத்தமர்ந்த தலைவா வருக சற்குணர்க்கே
வேகாக் காலை விளம்பவந்த விபுவே வருக வெறிவிலக்காம்
வெண்பா வுரைத்த தமிழ்த்தலைமை வேந்தே வருக வியனிலத்தில்
பாகார் மொழியார் பற்றருத்த பரமே வருக பத்திதனைப்
பாரி லெவர்க்கும் படவிரிக்கும் பாங்கே வருக பல்காலும்
வாகார் தெய்வ வடற்பதியின் வாழ்வே வருக விராமலிங்க
வள்ள லெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே. (10)

(கூடலூர் சிவ. துரைசாமி தேசிகர்)

அன்புமிக்க பெரியீர்!

திருவருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் கொள்கைகளைப் பரப்பும் நோக்கங்கொண்டு, இச்சங்கத்தை நிறுவி, திருவருட்பா பஜனையும், ஜீவகாருண்யம், சமரசம், கடவுள் பக்தி முதலிய சன்மார்க்க நெறிகள் சம்பந்தமான சொற்பொழிவுகளும், குருவாரந்தோறும், திருவருட்பா பயிற்சியும், செய்து வருகிறது.

சன்மார்க்கம் எங்கும் தழைத்தோங்க, துண்டு பிரசுரங்கள் வெளியிடுதலும், பொதுஜனப் பணிசெய்தலும் கல்வி அபிவிர்த்திக்கான ஏற்பாடுகளைச் செய்தலும், பலியிடும் கொடும் பழக்கத்தை அகற்றுவதற்குப் பிரசாரம் செய்தலும் சங்க நோக்கங்களாகும்.

அன்பர்கள் யாவரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து சங்கத்தின் நோக்கங்கள் செம்மைபெற நடந்தேறி சங்கம் முன்னேறப் பணிசெய்து வள்ளலாரின் திருவருட் கருணைக்குப் பாத்திரர்களாக வேண்டுகிறோம்.

வருட சந்தா ரூ 1—0—0

மாத சந்தா ரூ. 0—2—0

ஸ்ரீ ஷண்முகானந்த ஆசீரம,

சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார்.

சக்கரப்படித்துறை, தும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.